டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 19.06.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 002 - Madurai | Online Edition

# தமிழகத்தில் 27 மாவட்டங்களில் கனமழை வாய்ப்பு!

சென்னை, ஜூன் 18

தமிழகத்தில் நீலகிரி, கோவை, மதுரை, திருச்சி, சேலம் உள்ளிட்ட 27 மாவட்டங்களில் இன்று (ஜூன் 19) கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கிழக்கு விதர்பா முதல் தமிழக பகுதிகள் வரை, தெலங்கானா மற்றும் ஆந்திரா வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய கேரளப் பகுதிகளில் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. இவை காரணமாக தமிழகத்தில் இன்று பெரும்பாலான இடங்களில இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

மேலும் நீலகிரி, கோவை, ஈரோடு, திருப்பூர், தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப் பட்டினம், மயிலாடுதுறை, கரூர், திருச்சி, அரியலூர், பெரம்பலூர், கடலூர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல் மாவட்ட பகுதிகளில் ஒரு சில இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் 20 முதல் 24-ம் தேதி வரை ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும். ஒரு சில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உர விற்பனை நிலையங்களில் ஆய்வு

## மானிய விலை உரங்களை விற்பனை செய்யும் போது ரசீதில் விவசாயின் கையொப்பம் அவசியம்



மயிலாடுதுறை, ஜுன் 18

மயிலாடுதுறை மாவட்டம், வேளாண்மை இணை இயக்குனர் விஜயராகவன், வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு பொறுப்பு ராஜராஜன் வழி காட்டுதலின்படி குத்தாலம் வட்டாரத்தில் தனியார் உரம் விற்பனை நிலையத்தை வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் மற்றும் குத்தாலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் வளர்மதி உடன் ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது, நமது மத்திய அரசு விவசாயிகளுக்காக உரங்களுக்கான மானியங்கள் மிக அதிக அளவில் யூரியா மற்றும் டிஏபிக்கு உரங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. எனவே விவசாயிகளுக்கு யூரியா மற்றும் டிஏபி உரங்களை அவர்களின் நிலத்திற்கு ஏற்ப மட்டுமே வழங்க வேண்டும் அதிக அளவு விற்பனை செய்யக் கூடாது விற்பனை செய்யும் போது கண்டிப் பாக ஆதார் எண்ணுடன் பி ஓ எஸ் இயந்திரம் மூலம் பில் போடுவதுடன் கண்டிப்பாக ஸ்டாக் புக் மற்றும் விற்பனை ரசீதில் விவசாயிகளின் பெயர் மற்றும் தொலைபேசி எண்கள் இடம்பெற வேண்டும் என உர விற்பனையாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதேபோல் விவசாயிகள் எப்போதும் அனைத்து பயிர் களுக்கும் ஒருங்கிணைந்த உர மேலாண்மையில் கடைபிடிக்க வேண்டும். சாகுபடி செய்வதற்கு முன் மண் மாதிரி எடுத்து அதன் ஆய்வு அறிக்கை படி கிடைக்கக்கூடிய அனைத்து வகையான தொழு உரங்கள், பசுந்தால் பயிர், பசுந்தலைப்பயிர், பயிர் வகை பயிர்களை சுழற்சி முறையில் சாகுபடி செய்தல், அசோலா மற்றும் நீல பச்சை பாசியை பயன்படுத்துதல். அனைத்து வகையான

உயிர் உரங்கள் மற்றும் அனைத்து வகையான நுண்ணூட்ட உரங்களுடன், பரிந்துரைக்கப்பட்ட உரங்களை எப்போதும் பயிர்களுக்கு அதன் வளர்ச்சி பருவங்களுக்கு ஏற்ப, சமச்சீர் வகையில் பயன்படுத்த வேண்டும் என வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் அறிவுறுத்தினார். யூரியா மற்றும் டி ஏ பி உரங்களுக்கு மாற்றாக நானோ யூரியா மற்றும் நானோ டிஏபி பயன்படுத்துவதால் உர செலவு குறைத்து மண்வளத்தை காப்பதுடன் அதிக வருமானம் பெறலாம் என்றும் அதேபோல் டிஏபி மாற்றாக புதிதாக வந்துள்ள ட்ரிபிள் சூப்பர் பாஸ்பேட் பயன்படுத்தலாம் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.

# வட்டார வாரியாக உரக்கடைகளுக்கு ஆலோசனை மற்றும் பயிற்சி கூட்டம்



திண்டுக்கல், ஜூன் 18

திண்டுக்கல் மாவட்ட வேளாண் துறை சார்பில் வேளாண்மை இணை இயக்குநர் கோவிந்தராஜன் அறிவுறுத்தலின் பேரில் வேளாண்மை உதவி இயக்குநர் தரக்கட்டுப்பாடு முனைவர் இரா.ராஜேஸ்வரி, தலைமையில் உரக்கடைகளுக்கு பயிற்சி மற்றும் ஆலோசனை கூட்டம் இம்மாத தொடக்க முதலே வட்டார வாரியாக நடைபெற்று வருகிறது.

இக்கூட்டத்தில் யூரியா உரம் விற்பனை செய்ய தனி பதிவேடு பராமரித்தல், அனைத்து மானிய உரங்கள் மானியமில்லா உரங்கள் உயிரி உரங்கள் ஆர்கானிக் உரங்கள் ஆகிய வற்றிற்கு முறையாக பதிவேடு பராமரித்தல், விற்பனை முனைய இயந்திரத்தில் முறையாக பில் போட்டு குடோன் இருப்பு பிஓஎஸ் இருப்பு சரியான முறையில் பராமரிக்க அறிவுறுத்தப்பட்டது. தவறும் பட்சத்தில் அந்த உரக்கடை உரிமம் ரத்து செய்யப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டது. பதிவேடுகள் மற்றும் விலைப் பட்டியல் உரிமத்தை முறையாக பராமரித்தல் பற்றி வேளாண் அலுவலர் தரக்கட்டுப்பாடு செல்வக்குமார் உரக்கடைகளுக்கு பயிற்சி அளித்தார். இதில் அந்தந்த வட்டாரத்தைச் சேர்ந்த பல்வேறு உரக்கடை உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## சாட் வகைகள் : ஓர் அலசல் ஆய்வு

**வெள்ளரிக்காய் கிச்சடி**

**தேவைப்படும் பொருட்கள்**

வெள்ளரிக்காய் பொடி பொடியாக நறுக்கியது ஒரு கப்

தேங்காய் துருவல் அரை கப்

மிளகாய் இரண்டு எண்ணிக்கை

கேரட் துருவல் கால் கப்

சீரகம் கால் தேக்கரண்டி

தயிர் ஒரு கப்

மல்லி இலை சிறிது

கருவேப்பிலை சிறிது

**செய்முறை**

தேங்காய், பூண்டு, மிளகாய், சீரகம் எல்லாவற்றையும் ஒன்றாக சேர்த்து அரைத்து, நறுக்கி வைத்துள்ள வெள்ளரிக் காய் மற்றும் தயிர் சேர்த்து கிளறவும். தொடர்ந்து மல்லி இலைகளையும், கருவேப்பிலையும் பொடியாக நறுக்கி, கேரட் துருவலுடன் சேர்த்து நன்றாக கிளறி விடவும்.

**பயன்கள்**

சிறுநீர் கடுப்பு, மேகநோய்,இவற்றிற்கு மிகவும் நல்லது. உடல் உஷ்ணத்தை அகற்றி உற்சாகத்தை தருகிறது.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# நேரடி நெல் விதைப்பு மூலம் சாகுபடி டெல்டா பகுதி விவசாயிகளுக்கு பின்னேற்பு மானியம் வேளாண்மை உதவி இயக்குநர் தகவல்

அரியலூர், ஜூன் 18

அரியலூர் மாவட்டம், திருமானூர் வட்டார வேளாண் துறையின் மூலம் தமிழக அரசு ஆணைப்படி வட்டாரத்தில் உள்ள டெல்டா கிராமங்களில் குறுவை சிறப்பு தொகுப்பு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இது குறித்து வேளாண்மை உதவி இயக்குநர் பரமசிவம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

இத்திட்டத்தின் மூலம் இயந்திர நடவு முறை மற்றும் நேரடி நெல் விதைப்பு மூலம் நெல் சாகுபடி செய்துள்ள டெல்டா பகுதி விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.4000 பின்னேற்பு மானிய மாக வழங்கப்பட உள்ளது. இம்முறையில் நடவு மேற் கொண்டுள்ள விவசாயிகள் உழவன் செயலியில் முன்பதிவு செய்ய வேண்டும். மேலும் விவசாயிகள் தங்கள் ஆதார் அட்டை நகல், கணிணி சிட்டா, அடங்கல், வங்கி கணக்கு புத்தக நகல், இயந்திர நடவு முறையில் நெல் நடவு செய்துள்ள வயலின் புகைப்படம், இயந்திர நடவு செய்ததற்கான ரசீது ஆகிய ஆவணங்களை தங்கள் பகுதி உதவி வேளாண் அலுவலரிடம் ஒப்படைத்து பயனடையலாம்.

குறுவை நெல் சாகுபடிக்கு தேவையான உயிர் உரங்கள், நுண்சத்து, எதிர் பூஞ்சாண உயிரிகள் திருமானூர் வேளாண்மை விரிவாக்க மையம் மற்றும் ஏலாக்குறிச்சி துணை வேளாண்மை விரிவாக்க மைய கிடங்குகளில் விவசாயிகள் 50 % சதவீதம் மானிய விலையில் பெற்றுக் கொள்ளலாம் என வேளாண்மை உதவி இயக்குநர் பரமசிவம் தெரிவித்துள்ளார். உழவன் செயலியில் முன்பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் திட்டம் செயல்படுத்தப்படும். மேலும் விபரங்களுக்கு விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண் அலுவலர்கள் மற்றும் திருமானூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தென்னை பயிரில் ஒருங்கிணைந்த உர மேலாண்மை மற்றும் பூச்சி மேலாண்மை




ஈரோடு, ஜூன் 18

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் வட்டாரம், வேளாண்மைத் துறையின் மூலம் முடுக்கன்துறை கிராம் அரசு மாநில எண்ணெய் வித்து பண்ணையில் தென்னை பயிரில் ஒருங்கிணைந்த உர மேலாண்மை மற்றும் பூச்சி மேலாண்மை குறித்த பயிற்சி ஈரோடு மாவட்ட துணை இயக்குநர் (உழவர் பயிற்சி நிலையம்) அருள்வடிவு, தலைமையில் நடைபெற்றது. இப்பயிற்சியில் பவானிசாகர் ஒன்றிய செயலாளர் ரவிக்குமார் கலந்து கொண்டார்.

இப்பயிற்சிக்கு பவானிசாகர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் யசோதா வரவேற்புரையாற்றினார். இப்பயிற்சியில் ஈரோடு மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் மத்திய மாநில அரசு திட்டங்கள் பற்றி ஈரோடு மாவட்ட துணை இயக்குநர் (உழவர் பயிற்சி நிலையம்) அருள்வடிவு விவசாயிகளுக்கு விரிவாக எடுத்து கூறினார். கோபி வேளாண்மை அறிவியல் நிலையம் பேராசிரியர் சரவணன், தென்னை உழவியல் தொழில்நுட்பம் மற்றும் இயற்கை வேளாண்மை பற்றி விவசாயிகளுக்கு விரிவாக பயிற்சியளித்தார். பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் சத்தியசீலன், தென்னை பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை பற்றி விரிவாக எடுத்து கூறினார். மேலும் தோட்டக்கலை உதவி இயக்குநர் பிருந்தா, தென்னை சாகுபடி தொழில்நுட்பம் மற்றும் தென்னை விவசாயிகளுக்கு வழங்கப்படும் திட்டங்கள் பற்றி விவசாயி களுக்கு விரிவாக எடுத்து கூறினார். தென்னை நாற்றங் காலுக்கு வித்து தேர்வு செய்தல் மற்றும் நாற்றங்கால் பராமரிப்பு தொழில்நுட்பங்கள் பற்றி தோட்டக்கலை அலுவலர் ஸ்வேத்தா, வயல்வெளி பயிற்சியளித்தார். இப்பயிற்சியில் வேளாண்மை அலுவலர் மோகன்குமார், விளைநிலம் காப்போம் திட்டம் பற்றி வேளாண் துறை சார்ந்த திட்டங்கள் பற்றியும் விளக்கி கூறினார்.

இப்பயிற்சியில் அரசு மாநில எண்ணெய்வித்து பண்ணை மேலாளர் ஹேமாவதி, சுமதி,மாவட்ட ஆலோசகர் (தேசிய உணவு பாதுகாப்பு திட்டம்), உதவி தோட்டக்கலை அலுவலர்கள் சதீஸ்குமார் மற்றும் கௌரிசங்கர் ஆகியோர்கள் கலந்து கொண்டார்கள்.

மேலும் இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்டம் வட்டார தொழில்நுட்ப மேலாளர் கருணாம்பிகை, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் அன்புராஜ் மற்றும் மீரா ஏற்பாடு செய்திருந்தனர். இப்பயிற்சியில் தென்னை சாகுபடி செய்யும் விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.



# பூங்கார் அரிசி – பெண்களின் நலமும், பாரம்பரிய பலமும்!

பூங்கார் அரிசி என்பது தமிழ்நாட்டின் பாரம்பரிய நெல் ரகங்களில் ஒன்றாகும். இது 'பெண்களின் அரிசி' (Women's Rice) என்று அழைக்கப்படுகிறது.



பெண்களின் உடல் நலம், கர்ப்ப காலம் மற்றும் பிரசவத்திற்குப் பிறகான மீட்பிற்கு மிகவும் பயனுள்ளதாக பாரம்பரியமாக கருதப்படுகிறது.

## பெண்களுக்கு கிடைக்கும் நன்மைகள்

- **ஹார்மோன் சமநிலையை பேண உதவும்** – பெண்களுக்கு ஏற்படும் ஹார்மோன் மாற்றங்களால் வரும் பிரச்சினைகளை குறைக்க உதவுவதாக பாரம்பரிய நம்பிக்கை உள்ளது.

- **இரத்த சோகையைத் தடுக்கும்** – இரும்புச்சத்து (Iron) நிறைந்ததால் ஹீமோகுளோபின் அளவை அதிகரிக்க உதவுகிறது. மாதவிடாய் காரணமாக ஏற்படும் இரத்த இழப்பை ஈடு செய்ய உதவலாம்.

- **கர்ப்பிணிப் பெண்களுக்கு ஏற்றது** – கர்ப்ப காலத்தில் உடலுக்கு தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்கி, பாரம்பரியமாக சுகப்பிரசவத்திற்கு உதவுவதாகக் கருதப்படுகிறது.

- **தாய்ப்பால் சுரப்பை ஊக்குவிக்கும்** – பிரசவத்திற்குப் பிறகு தாய்ப்பால் சுரப்பை மேம்படுத்த உதவும் உணவாக பல இடங்களில் பயன்படுத்தப்படுகிறது.

- **நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்** – ஆன்டி-ஆக்ஸிடன்ட்கள், இரும்பு, துத்தநாகம் (Zinc), மக்னீசியம் போன்ற தாதுக்கள் நிறைந்துள்ளதால் உடலின் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்த உதவுகிறது.

- **செரிமானத்திற்கு நல்லது** – நார்ச்சத்து அதிகம் இருப்பதால் செரிமானத்தை மேம்படுத்தி மலச்சிக்கலை குறைக்க உதவுகிறது.

**100 கிராம் பூங்கார் அரிசியில் உள்ள சராசரி ஊட்டச்சத்து மதிப்புகள்**

| **ஊட்டச்சத்து** | **அளவு** |
| --- | --- |
| சக்தி | 340-360 கிலோ கலோரி |
| கார்போஹைட்ரேட் | 75-78 கிராம் |
| புரதம் | 7-9 கிராம் |
| கொழுப்பு | 1-2 கிராம் |
| நார்ச்சத்து | 2-4 கிராம் |
| கால்சியம் | 20-40 மி.கி |
| இரும்புச்சத்து | 2-5 மி.கி |
| மக்னீசியம் | 80-120 மி.கி |
| பாஸ்பரஸ் | 150-250 மி.கி |
| பொட்டாசியம் | 150-250 மி.கி |
| துத்தநாகம் | 1-2 மி.கி |

மேலும் இதில் ஆந்தோசயனின், பீனாலிக் சேர்மங்கள், பி-குழு வைட்டமின்கள் மற்றும் இயற்கை ஆன்டிஆக்ஸிடன்ட்கள் காணப்படுகின்றன.

பூங்கார் அரிசி என்பது ஒரு பாரம்பரிய நெல் ரகம் மட்டுமல்ல, அது ஆரோக்கியம், ஊட்டச்சத்து மற்றும் நிலையான வேளாண்மையின் அடையாளமாகும்.

தகவல் : *ஹஸ்வத்தா பத்மராஜ், அருந்ததி, கவிதாஞ்சலி, ஹர்ஷினி, ஹரிணி, மௌனிகா, நான்காம் ஆண்டு மாணவர்கள், வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளி, காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகம், திண்டுக்கல்.*



# சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் லாபம் தரும் கால்நடை வளர்ப்பு பயிற்சி

திருச்சி, ஜூன் 18

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு வேளாண் சார்ந்த பயிற்சிகள், நவீன தொழில்நுட்பங்கள், செயல்முறை விளக்கங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் வழங்கப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, லாபம் தரும் கால்நடை வளர்ப்பு பற்றிய நிலையப் பயிற்சி 20.06.26 (சனிக்கிழமை) அன்று நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் அதிக லாபம் ஈட்டும் துறையான கால்நடை வளர்ப்பில் கால்நடை இனங்களைத் தேர்வு செய்தல், கால்நடை பராமரிப்பு, கொட்டகை அமைத்தல், தீவன மேலாண்மை, தீவனப் பயிர்களின் வகைகள், நோய் பராமரிப்பு, செயற்கை கருவூட்டல், பால் உற்பத்தி போன்ற தலைப்புகளின் கீழ் விரிவாக பயிற்சி அளிக்கப்பட உள்ளது. மேலும், அன்று பிரதம மந்திரி கிசான் சம்மன் நிதி திட்டத்தின் 23வது தவணை வெளியீடு நிகழ்வு நேரடி ஒளிபரப்பு செய்யப்பட உள்ளது.

பங்குபெற ஆர்வமுள்ள விவசாயிகள் 0431-2962854, 99424 49786, 88381 26730 என்ற எண்களில் வேளாண்மை அறிவியல் நிலையத்தை தொடர்பு கொண்டு நிகழ்ச்சியில் கலந்து பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேற்கண்ட தகவல்களை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ந.புனிதவதி தெரிவித்தார்.



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# பூவுக்கு ஏழு பருவங்கள் இருக்கு. தெரியுமா?



என்ன பூவுக்குமா?

தமிழ் இலக்கிய மரபுபடி பெண்ணுக்கு 7 பருவங்கள் உள்ளது போல (பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை) பூக்களுக்கும் இருக்கிறது போல, அவை என்னென்ன என்பதை விரிவாக பார்ப்போம்.

நாம் சாதாரணமாக பூ என்று சொல்கிறோம். நம்முடைய முன்னோர்கள் ஒரு பூ மலர்ந்து, வாடும் வரை அதற்கான 7 வெவ்வேறான பெயர்கள் உள்ளன. அவை

**1) அரும்பு**

செடியில் மிகச்சிறியதாக ஒரு ஊசி முனையளவு தோன்றும் பூவின் முதல் பருவம்.

**2) மொட்டு**

அந்த அரும்பு சற்று பெரியதாகி, ஆனால் இதழ் விரியாமல் மூடியே இருக்கும். அது தான் மொட்டு.

**3) முகை**

மொட்டு இலோசாக விரியத் தொடங்கி உள்ளிருந்து நறுமணம் மெதுவாக வெளியே வரும் நேரம் இது.

**4) மலர்**

இதழ்கள் முழுமையாக விரிந்து பின் தான் பூ என்று சொல்லும் நாம் எல்லோருக்கும் தெரிந்த நிலை.

**5) அலர்**

பூ நன்றாக மலர்ந்து அதன் இதழ்கள் இன்னும் கொஞ்சம் பின்னோக்கி வளைந்து தனது முழு அழகையையும் காட்டும் நிலை.

**6) வீ**

பூவின் அழகு கொஞ்சம் கொஞ்சமாக குறையத் தொடங்கி வாடி செடியிலிருந்து கீழே வீழத் தொடங்கும் நிலை தான் இந்த 'வீ' ,

**7) செம்மல்**

பூ முழுவதுமாக வாடி காய்ந்து சுருங்கி, வாடி விடும் கடைசி நிலை தான் இது.

என்ன பூவின் 7 பருவங்களும் தெரிந்து கொண்டோமா?

தாய் தமிழின் அருமை பெருமைகளை எண்ணி வியப்படைவோம்.

மீண்டும் சந்திப்போம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# முந்திரியில் கவாத்து மற்றும் வேர், தண்டு துளைப்பான் மேலாண்மை குறித்த வெளிவாக பயிற்சி



கடலூர், ஜூன் 18

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம் விருத்தாசலம், சார்பாக 17.06.26 அன்று நல்லூர் வட்டாரம், பெலாந்துறை கிராமத்தில் முந்திரியில் கவாத்து மற்றும் வேர், தண்டு துளைப்பான் மேலாண்மை குறித்த வெளிவாக பயிற்சி நடைப்பெற்றது.

வேளாண்மை அறிவியல் நிலைய மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் க.நடராஜன், இப்பயிற்சியை துவக்கி வைத்து, கடலூர் மாவட்டத்திற்கு ஏற்ற அதிக மகசூல் தரும் முந்திரி இரகங்கள் பற்றியும் மற்றும் முந்திரி சாகுபடி குறித்தும் விளக்கினார். மேலும், முனைவர் சிவசங்கர், முந்திரிமரங்களைத் தாக்கும் தண்டு துளைப்பான் மற்றும் வேர் துளைப்பான் பூச்சிக்களைக் கட்டுப்படுத்தும் முறைகள் பற்றியும், முந்திரியில் சரியான உரமிடுதல், நீர்பாசன முறைகள் குறித்தும் மற்றும் பூச்சிக் கொல்லி மற்றும் பூஞ்சாணக் கொல்லிகளைத் தொடர்ச்சியாக தெளிக்கும் முறைகள் பற்றியும் தெளிவாக விளக்கினார். மேலும் முந்திரியில் கவாத்து செய்தல் பற்றி செயல்விளக்கமாக விவசாயிகளுக்கு காண்பிக்கபட்டது.

மேலும் இப்பயிற்சியில், அலெக்ஸ் (உதவி இயக்குநர் தோட்டக் கலைத் துறை) விருத்தாசலம், முந்திரி சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்தும் மற்றும் தோட்டக்கலைத் துறையில் செயல்படும் பல்வேறு திட்டங்கள், சொட்டு நீர் பாசனம் முறைகள் பற்றியும் விரிவாக விளக்கினார்.

மேலும் கடலூர் மாவட்டம், நல்லூர் வட்டாரம், பெலாந்துறை கிராமத்தை சேர்ந்த 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன்பெற்றனர்.

# ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலமே விவசாயத்தில் அதிக லாபம் ஈட்ட முடியும்

## வேளாண் மாணவர்கள் தகவல்




கடலூர், ஜூன் 18

விவசாயிகள் ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலமே விவசாயத்தில் அதிக லாபம் ஈட்ட முடியும் என்பதைத் தெரிந்து கொள்ள, அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் மாணவர்கள் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு நேரடி களப்பயணம் மேற்கொண்டனர்.

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவிலில் இயங்கி வரும் சிதம்பரம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு (Chidambaram FPO), அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண்மைப் புல இறுதி ஆண்டு B8 பிரிவு மாணவர்கள் தங்களின் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாகச் சென்றனர். நாட்டார் மங்கலம் கிராமத்தில் தங்கிப் பணியாற்றி வரும் இம்மாணவர்கள், இந்த நிறுவனத்தின் செயல்பாடுகளை நேரில் கண்டு விரிவாகக் கேட்டறிந்தனர்.

விவசாயிகள் தனித்தனியாகத் தங்கள் விளைபொருட்களை விற்பதை விட, ஒரு குழுவாக (FPO) இணைந்து மதிப்புக்கூட்டி விற்கும்போது இடைத்தரகர்கள் இல்லாத நல்ல லாபம் கிடைக்கும் என்பதை நிறுவனத்தின் அதிகாரிகள் மாணவர்களுக்கு விளக்கினர். மேலும், இந்நிறுவனத்தின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் தரமான விதைகள், இயற்கை உரங்கள், இடுபொருட்கள் மற்றும் நவீன வேளாண் கருவிகளின் வாடகைச் சேவைகள் குறித்தும் மாணவர்கள் கேட்டறிந்தனர்.

விவசாயிகளின் பொருளாதாரத்தை உயர்த்தும் இத்தகைய உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் முக்கியத்துவத்தை, தாங்கள் தங்கியுள்ள நாட்டார்மங்கலம் கிராமத்து விவசாயி களிடமும் கொண்டு சேர்த்து விழிப்புணர்வு ஏற்படுத்தப் போவதாக B8 பிரிவு மாணவர்கள் உற்சாகத்துடன் தெரிவித்தனர். இம் மாணவர்களின் இந்த ஆக்கப்பூர்வமான களப்பயணம் அவர் களுக்குப் பெரும் பயனுள்ளதாக அமைந்தது.

# இயற்கை விவசாயத்தில் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளின் பயன்பாடுகள்



சேலம், ஜூன் 18

சேலம் வட்டாரம் இணாம்வேடு காத்தாம்பட்டியில் நடைபெற்ற விவசாயிகள் வேளாண்மை உதவி இயக்குநர் கவிதா, இயற்கை விவசாயத்தில் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளின் பயன்பாடுகள் பற்றி தெரிவித்தார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் கந்தசாமி விளை நிலம் காப்போம் இயக்கம் பற்றி விவசாயிகளுடன் கலந்துரை யாடினார். வேளாண்மை அலுவலர் ஹனிசா வேளாண்மைத் துறை திட்டங்கள் பற்றி தெரிவித்தார்.

பயிற்சியில் ஒழுங்குமுறை விற்பனை மற்றும் மின்னணு தேசிய வேளாண் சந்தை வேளாண் வணிகம் மற்றும் விற்பனை துறையின் கண்காணிப்பாளர் பிரகாஷ் குமார் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களின் செயல்பாடுகள், வேளாண் விளை பொருட்களை தரம் பிரித்து விற்பனை செய்வதன் நன்மைகள், கிடங்கு வசதிகள், அடமானக் கடன் திட்டம் மற்றும் மின்னணு தேசிய வேளாண் சந்தை (e-NAM) மூலம் நாடு முழுவதும் உள்ள வியாபாரிகளுக்கு நேரடியாக விளைபொருட்களை விற்பனை செய்யும் முறைகள் குறித்து விளக்கம் அளித்தார். இதில் கலந்து கொண்ட விவசாயிகள், சந்தை வாய்ப்புகளை பயன்படுத்தி தங்களது வருமானத்தை அதிகரிப்பதற்கான வழிமுறைகளை அறிந்து கொண்டனர். உதவி தொழில்நுட்ப மேலாளர் செல்லி ராஜ்குமார் நிலக்கடலை சாகுபடி பற்றி தெரிவித்தார்.



# விதை விற்பனை நிலையங்களில் திடீர் ஆய்வு! உரிய ஆவணங்கள் இல்லாத ரூ.2.40 லட்சம் மதிப்புள்ள விதைகளை விற்பனை செய்ய தடை

விருதுநகர், ஜூன் 18

விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்ட விதை விற்பனை நிலையங்களில் திடீர் ஆய்வு செய்யப்பட்டதில் முறையான ஆவணங்கள் இன்றி இருப்பு வைக்கப்பட்டிருந்த விதைகளை அதிகாரிகள் கண்டறிந்து விற்பனை தடை விதித்தனர்.

விருதுநகர் மற்றம் தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளுக்கு தரமான விதைகள் கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு துறை இயக்குநர் அறிவுறுத்தலின் படி சிறப்பு ஆய்வுக் குழு அமைக்கப் பட்டது. அதன்படி, இராமநாதபுரம் விதை ஆய்வு துணை இயக்குநர் வீரேஸ்வரன் மற்றும் விருதுநகர் விதை ஆய்வு துணை இயக்குநர் இராஜேந்திரன் ஆகியோரின் தலைமை யிலான விதை ஆய்வு குழுவினர் அருப்புக்கோட்டை, சாத்தூர், இராஜபாளையம், திருவில்லிபுத்தூர், கோவில்பட்டி ஆகிய பகுதிகளில் உள்ள விதை விற்பனை நிலையங்களில் திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

இவ்வாய்வின் போது விதை விற்பனை நிலையங்களில் விற்கப்படும் விதைகளுக்கு முளைப்புத்திறன் சான்று, பதிவுறுச் சான்றுகள் உள்ளனவா என்பது ஆய்வு செய்யப்பட்டது. மேலும் விதைகள், உரங்கள் மற்றும் பூச்சிகொல்லி மருந்துகளிடம் இருந்து பிரித்து முறையாக சேமிக்கப்பட்டுள்ளனவா என்பதும் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வின் போது முறையான ஆவணங்களின்றி இருப்பு வைக்கப்பட்டிருந்த ரூ.2.40 இலட்சம் மதிப்புள்ள 180 கிலோ விதைகளுக்கு சிறப்பு ஆய்வுக் குழுவினர் விற்பனைத் தடை விதித்து விளக்கக் கடிதம் கேட்டுள்ளனர்.

மேலும் அவர்கள் கூறியதாவது, விதைகள் விற்பனை செய்யும் போது விவசாயிகளுக்கு உரிய பில் வழங்கி அவர்களிடம் கையெழுத்தும் பெற்றிட வேண்டும் என அறிவுறுத்தினர். முறையான ஆவணங்கள் இன்றி விதைகள் விற்பனை செய்யப்பட்டால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எச்சரித்துள்ளனர்.

# திருந்திய நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெறும் விவசாயிக்கு விருது!

## விண்ணப்பிக்க விவசாயிகளுக்கு அழைப்பு!!

அரியலூர், ஜுன் 18

திருந்திய நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெறும் விவசாயிகளுக்கு, சி.நாராயணசாமி நாயுடு விருது பெற விண்ணப்பிக்க மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் உலகம்மை முருகக்கனி அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது,

வேளாண்மைத் துறை மூலம், 2026-27ம் ஆண்டுக்கான நெல் சாகுபடியில் திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தை கடைபிடித்து, மாநிலத்தில் அதிக உற்பத்தி திறன் பெறும் விவசாயிக்கு, சி. நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தி திறனுக்கான விருது அறிவிக்கப்படுகிறது. இப்போட்டியில் கலந்து கொண்டு மாநில அளவில் வெற்றி பெறும் விவசாயிக்கு பரிசாக ரூ.5 லட்சம், ரூ.7,000 மதிப்பில் பதக்கம் வழங்கப்படும்.

இப்பயிர் விளைச்சல் போட்டியில் போட்டியிடும் விவசாயி, சொந்த அல்லது குத்தகை நிலம், குறைந்தது 2 ஏக்கர் பரப்பில் நெல் சாகுபடி செய்பவராக இருக்க வேண்டும்.

போட்டியில் பங்கு பெறும் வயலில் ஏக்கருக்கு 2,500 கிலோ மகசூல் பெறப்பட்டால் மட்டுமே போட்டியில் பங்கேற்க முடியும். விவசாயிகள் அரசால் அங்கீகரிக்கப்பட்ட நெல் ரகங்களை மட்டுமே பயிர் செய்திருக்க வேண்டும்.

பயிர் விளைச்சல் போட்டியில் பங்கேற்கும் விவசாயிகள் தங்கள் வட்டார வேளாண் அலுவலகத்தில் விண்ணப்பித்து, நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்தி பதிவு செய்ய வேண்டும்.

வெற்றியாளர்களை அறிவிப்பதில் வேளாண்மை இணை இயக்குநர் தலைமையிலான குழு முடிவு செய்யும். விவசாயிகள் இப்போட்டியில் பங்கேற்று பயன் பெறலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# அங்கக வேளாண்மை மற்றும் இயற்கை வேளாண்மை தொழில்நுட்ப பயிற்சி




ஈரோடு, ஜூன் 18

ஈரோடு வட்டாரம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, கீழ் செயல்படும் வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் விவசாயிகளுக்கு வேளாண்மை மற்றும் அங்கக இயற்கை வேளாண்மை தொழில் நுட்பங்கள் பற்றிய பயிற்சி நடைப்பெற்றது.

இது குறித்து ஈரோடு மற்றும் சென்னிமலை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சி.சசிகலா அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது, ஈரோடு வட்டாரம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, கீழ் செயல்படும் வட்டார தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் சத்திரம்புதூர் கிராமத்தில் விவசாயிகளுக்கு அங்கக வேளாண்மை மற்றும் இயற்கை வேளாண்மை தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி நடைப்பெற்றது. இந்த பயிற்சியில் வேளாண் அறிவியல் நிலையம், கோபிசெட்டிபாளையம் விஞ்ஞானி மு.சிவா, பசுந்தாள் பயிர்களை நடவு செய்து மண்ணின் வளத்தை இயற்கை முறையில் மேம்படுத்த வேண்டும், இரசாயன உரங்களின் பயன்பாடுகளை குறைத்து அங்கக உரபயன்பாட்டை மேம்படுத்த வேண்டும், மேலும் உயிர் உரங்கள், உயிரில் கட்டுப்பாட்டு காரணிகளை பயன்படுத்த வேண்டும் இதன் மூலம் மண் வளம் காக்கப்படும் என்பதை விளக்கமாக கூறினார்.

குமரகுரு வேளாண்மை கல்லூரி பேராசிரியர் டாக்டர் முனைவர் ரா.சுரேஷ், மண் பரிசோதனை முடிவின் அடிப்படையில் சமச்சீர் முறையில் உர மேலாண்மை மேற்கொள்ள வேண்டும். மேலும் பசுந்தாள் பயிர்களை நடவு செய்து மண்ணின் வளத்தை இயற்கை முறையில் மேம்படுத்த வேண்டும், இரசாயன உரங்களின் பயன் பாடுகளை குறைத்து அங்கக முறை உர பயன்பாட்டை மேம்படுத்த வேண்டும் என்பதை விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்துரைத்தார். த.நிவேதா, வேளாண்மை துறையின் மூலம் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்கள் பற்றிய விபரங்களை தெளிவாக எடுத்துரைத் தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.சா.கிருத்திகா, அட்மா திட்டங்களின் செயல்பாடுகள் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார். உதவி வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.செங்கோட்டையன், உழவன் செயலி முலம் இடுபொருட்கள் பதிவு செய்யும் முறைகளை தெளிவாக எடுத்துரைத்தார்.

# டெல்டா விவசாயிகளுக்கு குறுவை பின்னேற்பு மானியம்

அரியலூர், ஜூன் 18

அரியலூர் மாவட்டம், தா.பழூர் வட்டாரத்தில் வேளாண்மைத் துறை மூலம் தமிழக அரசு ஆணைப்படி தா.பழூர் வட்டாரத்தில் உள்ள டெல்டா கிராமங்களில் குறுவை சிறப்பு தொகுப்பு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இது குறித்து வேளாண்மை உதவி இயக்குநர் தமிழ்மணி வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

இத்திட்டத்தின் மூலம் இயந்திர நடவு முறை மற்றும் நேரடி நெல் விதைப்பு மூலம் நெல் சாகுபடி செய்துள்ள டெல்டா பகுதி விவசாயிகளுக்கு 1 ஏக்கருக்கு ரூ.4000/- பின்னேற்பு மானியமாக வழங்கப்பட உள்ளது.

இம்முறையில் நடவு மேற்கொண்டுள்ள விவசாயிகள் உழவன் செயலியில் முன்பதிவு செய்ய வேண்டும். தங்களது ஆதார் அட்டை நகல், கணிணி சிட்டா, அடங்கல், வங்கி கணக்கு புத்தக நகல், இயந்திர நடவு முறையில் நெல் நடவு செய்துள்ள வயலின் புகைப்படம், இயந்திர நடவு செய்ததற்கான ரசீது, ரேன் கார்டு நகல் ஆகிய ஆவணங்களை தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலரிடம் ஒப்படைத்து பயனடையலாம்.

குறுவை நெல் சாகுபடிக்கு தேவையான உயிர் உரங்கள், நுண்சத்து, எதிர் பூஞ்சாண உயிரிகள் தா.பழூர் வேளாண்மை விரிவாக்க மையம் மற்றும் விக்ரமங்கலம் துணை வேளாண்மை விரிவாக்க மைய கிடங்குகளில் விவசாயிகள் 50% மானிய விலையில் பெற்றுக்கொள்ளலாம் என வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) தமிழ்மணி தெரிவித்துள்ளார்.

உழவன் செயலியில் முன் பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் திட்டம் செயல்படுத்தப்படும்.

மேலும் விபரங்களுக்கு விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் தா.பழூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை அனுகலாம் என தெரிவிக்கப்படுகிறது.

# விளைநிலம் காப்போம் விழிப்புணர்வு முகாம்!



சிவகங்கை, ஜூன் 18

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டம், செம்பனூர் வருவாய் கிராமம் சூரவந்தி கிராமத்தில் விளை நிலம் காப்போம் முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் சிவகங்கை மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (உ.ப.நி) பொ.செல்வம் தலைமை வகித்து இயற்கை விவசாயம், மண்வள மேலாண்மை, ஒருங்கிணைந்த ஊட்டசத்து மேலாண்மை, காலநிலைகேற்ற விவசாய தொழில்நுட்பங்கள், குறைந்த செலவில் அதிக வருமானம் பெறுவதற்கான தொழில்நுட்பங்கள் மற்றும் அனைத்து பயிர்களுக்கும் உற்பத்தி திறன் மேம்பாட்டு காரணிகள் பற்றியும் விவசாயிகளுக்கு விரிவான முறையில் எடுத்து கூறினார்.

காளையார்கோவில் வட்டார துணை வேளாண்மை அலுவலர் செந்தில், இப்பயிற்சியில் மண் ஆய்வுக்கு மண் மாதிரி சேகரிக்கும் முறைகள், மண் ஆய்வு செய்வதன் முக்கியத்துவங்கள் மண் மாதிரி எடுக்க கூடாத இடங்கள் மற்றும் மண் ஆய்வு செய்வதற்கு அனுப்ப வேண்டிய விபரங்கள் குறித்து எடுத்து கூறினார். மண் வள அட்டை பயன்படுத்தி பயிர்களுக்கு உரமிடுமாறு அறிவுரை கூறினார்.

காளையார்கோவில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஜோதி, விவசாயிகள் அனைவரும் தங்கள் நிலங்களில் கோடை உழவு செய்வதால் ஏற்படும் நன்மைகள் மற்றும் உயிரி உரங்களான திரவ அசோஸ்பைரில்லம், திரவ ரைசோபியம் (பயறு) திரவ பாஸ்போ பாக்டிரியா, உபயோகிக்கும் முறைகள் (விதை நேர்த்தி, நாற்று நனைத்தல், நேரடி வயலில் இடுதல், நீர் வழி உரமிடதல்) பற்றியும் விவசாயிகளுக்கு செயல்விளக்கம் மூலம் எடுத்து கூறினார். மேலும், இலை வண்ண அட்டைபயன்படுத்தி தழைசத்து உரமிடுதல் பற்றி செயல்விளக்கம் மூலம் எடுத்து கூறினார்.

காளையார்கோவில் வட்டார உதவி வேளாண்மை அலுவலர் யோகலெட்சுமி, வேளாண்மை விரிவாக்க மையங்களில் உள்ள தக்கைபூண்டு (50 சதவீதம் மானியம்), நுண்ணூட்ட உரங்கள் எக்டேருக்கு 12.5 கிலோ மற்றும் அனைத்து பயிர்களுக்கு திரவ உயிர் உரங்கள் (50 சதவிதம் மானியத்தில்) போன்ற இடுபொருட் களின் இருப்பு விபரங்கள் பற்றிக் கூறினார். மேலும், விவசாயிகள் தங்கள் நிலங்களில் குறைந்த அளவில் நீரை பயன்படுத்தி அதிக மகசூல் பெறுவதற்கான தொழில்நுட்பங்களான சொட்டு நீர் பாசனம்

மற்றும் தெளிப்பு நீர் பாசனம் திட்டம் குறித்து எடுத்து கூறினார். மேலும், மண் மாதிரி சேகரிப்பதற்கான செயல்விளக்கத் திடலில் வேளாண்மை துணை இயக்குநர் முன்னிலையில் மண்மாதிரிகள் சேகரிப்பட்டது. மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டம் (அட்மா) 2025-26ம் ஆண்டிற்கான நிதியில் வேளாண்மைத் துறைக்கு வழங்கப்பட்ட பூக்கள் / காய்கறிகள் அறுவடை பாதுகாப்பு கருவிகள் அமைக்கப்பட்ட செயல்விளக்க திடலை ஆய்வு செய்து விவசாயிகளுக்கு தொழில்நுட்பங்களை எடுத்து கூறினார். இந்த முகாம் நடத்துவதற்கான முன்னேற்பாடு களை உதவி தொழில்நுட்ப மேலாளர் காளிஸ்வரி ஏற்பாடு செய்தார்.



# விதைப்பரிசோதனை செய்வீர்! விளைச்சலை அதிகரிப்பீர்!!

விருதுநகர், ஜூன் 18

விருதுநகர் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் அலுவலக வளாகத்தில் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு துறையின் கீழ் விதைப் பரிசோதனை நிலையம் இயங்கி வருகிறது.

இவ்வாய்வகத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் விதை களின் தரங்களான சுத்தத்தன்மை, முளைப்புத்திறன், ஈரப்பதம், பிற இரக கலவன்கள் போன்ற விதைத் தரத்தை ஆய்வு செய்து, ஆய்வறிக்கை வழங்கப்படுகிறது. நம் விருதுநகர் மாவட்டத்தில் மக்காச்சோளம், நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், காய்கறி பயிர்கள், எள், பருத்தி மற்றும் கடலை ஆகியன பிரதான பயிர்களாக சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. தரமான விதைகளைப் பயன்படுத்தும் போது அதிக மகசூல் பெற முடியும். நெல், மக்காச்சோளம் போன்ற தானியங்களுக்கு 80 முதல் 90 சதவீதமும், பயறு வகைகளுக்கு 75 சதவீதமும், ரகப்பருத்திக்கு 65 சதவீதமும், வீரிய ஒட்டு பருத்திக்கு 75 சதவீதமும், எள்ளுக்கு 80 சதவீதமும் மற்றும் கடலைக்கு 70 சதவீதமும் முளைப்புத் திறன் இருக்க வேண்டும்.

மேலும் அனைத்து விதைகளிலும் குறைந்தபட்சம் 97-98 சதவீத சுத்தத் தன்மை இருக்க வேண்டும். விதையின் ஈரப்பதம் நெல், மக்காச்சோளம் போன்ற தானிய வகைகளுக்கு முறையே 13,12 சதவீதமும் பயறு மற்றும் கடலை வகை விதைகளுக்கு 9 சதவீதமும் இருத்தல் வேண்டும். சான்று பெறப்பட்ட தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெறலாம்.

மேலும், விதைப் பரிசோதனை நிலையத்தில் ரூ.80/- கட்டணம் செலுத்தி பரிசோதனை செய்து பயன்பெறலாம் என விதைப் பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி, வேளாண்மை அலுவலர்கள் ஜானகி மற்றும் சாய்லட்சுமி சரண்யா ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

மேலும் விபரங்களுக்கு 94868 58066 என்ற மொபைல் எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

# காய்கறிப் பயிர்களில் ஒருங்கிணைந்த நூற்புழு மேலாண்மை

**அறிமுகம்**

காய்கறிப் பயிர்கள் நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவை வாழ்வாதாரம், வேலை வாய்ப்பு ஆகியவற்றை வழங்குவதுடன், தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் (GDP) குறிப்பிடத்தக்க அளவில் பங்களிக்கின்றன. மேலும், விலை மாற்றங்களால் ஏற்படும் பாதிப்புகளை குறைத்து பொருளாதார நிலைத்தன்மையையும் மேம்படுத்துகின்றன.

சீனாவிற்கு அடுத்தபடியாக உலகில் அதிகளவு காய்கறி உற்பத்தி செய்யும் நாடாக இந்தியா திகழ்கிறது. ஆண்டுதோறும் 200 மில்லியன் டன்களுக்கு மேற்பட்ட காய்கறிகள் உற்பத்தி செய்யப் படுகின்றன. காய்கறி சாகுபடி ஊட்டச்சத்து, வருமானம் மற்றும் வேலை வாய்ப்பின் முக்கிய ஆதாரமாக உள்ளது. மேம்பட்ட பாசனவசதி, கலப்பு விதைகள் மற்றும் தீவிர சாகுபடி முறைகளால் மாநிலத்தில் உற்பத்தித் திறன் உயர்ந்துள்ளது.

உலகளவில், நூற்புழுக்கள் (Nematodes) காய்கறி உற்பத்தியில் மிகப்பெரிய பொருளாதார இழப்புகளை ஏற்படுத்துகின்றன. நூற்புழுக்கள் போன்ற மண்ணில் மறைந்துள்ள நுண்ணுயிரிகள் மகசூல் திறனை பாதிக்கின்றன. இவை மட்டும் 30-40% வரை மகசூல் இழப்பை ஏற்படுத்தக்கூடும். குறிப்பாக தக்காளி மற்றும் கத்தரிக்காய் போன்ற அதிக மதிப்புள்ள பயிர்களில் கடுமையான தாக்குதலின் போது இழப்பு மேலும் அதிகரிக்கலாம். இதனால் விவசாயிகளின் வருமானம், சந்தை விநியோகம் மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு ஆகியவை பாதிக்கப்படுகின்றன.

**காய்கறி பயிர்களை தாக்கும் முக்கிய நூற்புழுக்கள்**

- வேர் முடிச்சு நூற்புழுக்கள் (Meloidogyne spp.)
- வேர் காயப் புழுக்கள் (Pratylenchus spp.)
- துளையிடும் நூற்புழுக்கள் (Radopholus similis)
- ஸ்டிங் நூற்புழுக்கள் (Hoplolaimus spp.)
- உருளைக்கிழங்கு நூற்புழுக்கள் (Globodera spp.)

**பொதுவானஅறிகுறிகள்**

**மண்ணுக்கடியில் காணப்படும் அறிகுறிகள்**

- வேர் முடிச்சுகள் (Root galls) உருவாகுதல்

● அடர்த்தியான முடிச்சுகள், வேர் வடிவ மாற்றம், வேருக்குள் முட்டைத் தொகுப்புகள்

● நீர் மற்றும் ஊட்டச்சத்துக்களை உறிஞ்சுதல்

**மண்ணுக்கு மேல் காணப்படும் அறிகுறிகள்**

● இலை மஞ்சளாதல்
● வாடுதல்
● வளர்ச்சிக் குறைதல்
● ஊட்டச்சத்துக் குறைபாடு அறிகுறிகள்
● பூக்கும் திறன் மற்றும் காய்களின் அளவு/மகசூல் குறைதல்

**ஒருங்கிணைந்த நூற்புழு மேலாண்மையின் (INM) முக்கிய கூறுகள்**

- பாரம்பரிய முறைகள்
- இரசாயன கட்டுப்பாடு
- உயிரியல் கட்டுப்பாடு
- எதிர்ப்பு சக்தி கொண்ட ரகங்கள்

**பாரம்பரிய முறைகள் (Cultural Practices)**

**பயிர் சுழற்சி (Crop rotation)**

எள்ளு, கடுகு, கோதுமை, பார்லி போன்ற பயிர்களில் பூச்சித் தாக்குதல் குறைவாக இருப்பதால், நூற்புழுக்களின் தாக்கமும் கட்டுப்பாட்டில் இருக்கும் இப்பயிர்களை மாற்றி மாற்றி பயிரிடுவது நூற்புழுக்களின் வாழ்க்கைச் சுழற்சியை முறிக்க உதவுகிறது.

**இனக்கவர்ச்சி பயிர்கள் (Trap crops)**

இவ்வகைப் பயிர்கள் ஊடுபயிர்களாக முதன்மைப் பயிருக்கு இடையில் பயிரிடப்படுகின்றன. 25 நாட்கள் முதல் ஒரு மாதத்திற்குள் அவை அகற்றப்பட வேண்டும். இந்த முறையால் நூற்புழுக்களின் எண்ணிக்கையைக் குறைத்து, அவற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும்.

எ.கா : சணப்பை வகை தாவரம் (Crotalaria spectabilis.)

**மூடு பயிர்கள் (Cover crops)**

முதன்மை பயிர் அறுவடை செய்யப்பட்ட பின் அல்லது அடுத்த பயிரிடும் பருவத்திற்கு முன் மூடு பயிர்கள் பயிரிடப்படுகின்றன. பொதுவாக 45-60 நாட்கள் வளர்ந்த பின் மண்ணில் மடக்கி உழவு செய்யப்படுகின்றன. இவை நூற்புழு எண்ணிக்கையை குறைத்து, அவற்றின் வாழ்க்கைச் சுழற்சியை முறித்து, மண் ஆரோக்கியத்தை மேம்படுத்துகின்றன.

எ.கா: சணப்பு (Sunhemp), காராமணி, சாமந்தி.

**பசுந்தழைகள் அல்லது பசுந்தழை பயிர்கள் (Green Manure Crops)**

பசுந்தழை பயிர்கள் (Green manure crops) என்பது மண்ணின் வளத்தை அதிகரிக்க வளர்ப்பவை ஆகும். பின்னர் மண்ணில் மடக்கி உழவு செய்யப்படுகின்றன. இவை மண்ணில் தழைச்சத்து (Nitrogen) மற்றும் கரிமப் பொருட்களின் அளவை அதிகரித்து மண் வளத்தை மேம்படுத்தி, மண் அமைப்பைச் சீராக்கி பயிர் வளர்ச்சியை ஊக்குவிக்க உதவுகின்றன. இத்தாவரங்கள் நூற்புழுக்களை கட்டுப் படுத்தும் தன்மை கொண்ட வேதிப்பொருட்களை வெளியிடுகின்றன. இதன் மூலம் நூற்புழுக்களின் எண்ணிக்கை கணிசமாக குறைக் கின்றது.

எ.கா : சணப்பு, தக்கைப்பூண்டு (Sunhemp), உளுந்து, பச்சைப் பயறு மற்றும் கொழுஞ்சி.

**இடைநிலை சாகுபடி செயல்முறைகள் (Intercultural operations)**

சரியான பாசன மேலாண்மை, நல்ல வடிகால் வசதி மற்றும் உயிர்ச்சத்து பொருட்கள் பயன்பாடு மூலம் மண் ஆரோக்கியத்தை பராமரித்தல்.

**எதிர்ப்பு திறன் கொண்ட ரகங்கள்**

இவை எளிதில் நோயால் பாதிக்கப்படாமல், பூச்சிகள் தாக் கினாலும் அதிக சேதமின்றி வளரக்கூடிய பயிர் ரகங்கள். நூற் புழுக்களுக்கு எதிர்ப்புதிறன் கொண்ட ரகங்களை பயன்படுத்துவது மிகவும் பயனுள்ளதாகும். உதாரணமாக, தக்காளியில் ஹிசார் லலித் (Hisar Lalit) மற்றும் உருளைக்கிழங்கில் குஃப்ரிஸ்வர்ணா (Kufri Swarna) ஆகியவை எதிர்ப்பு திறன் கொண்டவை.

**இரசாயனக் கட்டுப்பாடு (Chemical Control)**

நூற்புழு தாக்குதல் கடுமையாக இருக்கும் போது நெமாட்டி சைடுகள் (Nematicides) பயன்படுத்தப்படுகின்றன. இவைநூற்புழு எண்ணிக்கையை விரைவாகக் குறைக்க உதவுகின்றன. ஆனால், இவை அதிக செலவானவை மற்றும் பயனுள்ள நுண்ணுயிர் களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடும்.

- ஃபுளுயன்சல்ஃபோன் [Fluensulfone]
- புளுபைரம் [Fluopyram]
- ஆக்ஸாமைல் [Oxamyl]
- ஃபோஸ்தியாசேட்ன் Fosthiazate]

### உயிரியல் கட்டுப்பாடு (Biological Control)

உயிரியல் காரணிகளைப் பயன்படுத்துவதன் மூலம் நூற்புழுக்களின் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்படுகிறது. இந்த முறைகள் சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் நிலைத்தன்மை வாய்ந்தவை. இந்த முறையில் உயிருடன் உள்ள உயிரினங்கள் பயன்படுத்தப் படுகின்றன.

உதாரணமாக, வேட்டையாடும் நூற்புழுக்கள், பூஞ்சைகள் மற்றும் பாக்டீரியாக்கள்.

### பயன்படுத்தப்படும் பயனுள்ள நுண்ணுயிர்கள்

- பொக்கோனியாகிளாமிடோஸ்போரியா [Pochonia chlamydosporia]
- பைகோமைசிஸ்லிலாசினஸ் [Paecilomyces lilacinus]
- சூடோமோனாஸ் ஃப்ளோரசன்ஸ் [Pseudomonas fluorescens]
- பேசில்லஸ் வகை [Bacillus spp.]

### முடிவு

நூற்புழுக்கள் காய்கறி சாகுபடிக்கு மிகவும் ஆபத்தான அச்சுறுத்தலாக உள்ளன. அவற்றை கட்டுப்படுத்த அறிவியல் சார்ந்த மற்றும் சம நிலையான அணுகு முறை அவசியமாகிறது. ஒருங்கிணைந்த நூற்புழு மேலாண்மை (INM), பல்வேறு முறை களை ஒருங்கிணைத்து நிலையான தீர்வை வழங்குகிறது. ஆரோக்கியமான மண் மற்றும் ஆரோக்கியமான பயிர்களை உருவாக்கும் வெற்றிக்கான முக்கிய திறவு கோல் ஒருங்கிணைந்த மேலாண்மையே ஆகும்.

தகவல் : *ராஜபிரியா.தே, ரம்யா.செ, சுமித்ரா.பூ, வைஷ்ணவி.ச, வனிதா லட்சுமி.ரா, இளங்கலை வேளாண் மாணவிகள் மற்றும் கணேசன்.கு,உதவி பேராசிரியர், நூற்புழுவியல் துறை, இமயம் வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு, 621 206.*

**தொடர்பு ஆசிரியரின் மின்னஞ்சல் முகவரி : ganeshanknem@gmail.com**



# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**